# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2497/33 - 2026 ජූලි මස 15 වැනි බදාදා - 2026.07.15**

2497/33 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டு விலகல் காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு. துவான் பாஹிம் மொஹமட் அப்துல்லா என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சக்தி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. வன்னி ஆரச்சிகே பிரசன்ன சஞ்ஜீவ ரொட்ரிகு என்பவரைப் பெயர்குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்,

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பியுமி ஆடிகல ஆகிய நான் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ (1)(ஆ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு திரு. வன்னி ஆரச்சிகே பிரசன்ன சஞ்ஜீவ ரொட்ரிகு என்பவர் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**பியுமி ஆடிகல,**
தெரிவத்தாட்சி அலுவலர்
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை

**கொழும்பு நகர தேர்தல் அலுவலகம்,**
**2026,யூலை 14.**

EOG 07 - 0180


1A - PG 7804 — 04 (2026/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*